**<u>IN THE COURT OF THE SUBORDINATE JUDGE OF ATTUR</u>**

**MCOP.No. 33/2019**

**Deposition of: R.W.1**

**Name** : முகமது ரபீக் **Father Name :**

**Village** : **Taluk** :

**Nationality** : **Age** :

**Calling** :

**Solemnly affirmed by in accordance with the provision of the Indian Oath Act 44 of 1969, on Date: 17.10.2024.**

<u>முதல் விசாரணை</u>**:**

1) நான் இம்மனுவின் மூன்றாம் தரப்பினர் ஆவேன். ஆர்.டி.ஓ. ஆத்தூர் அவர்கள் சார்பாக சாட்சியம் அளிக்க அனுமதி கடிதம் பெற்றுள்ளேன். அது எ.மா.சா.ஆ.2. நான் அந்த அலுவலகத்தில் உதவியாளராக பணி செய்கிறேன். அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்களை கொண்டுவந்துள்ளேன். வாகன ஆய்வறிக்கை, வாகன ஓட்டுனரின் விவரம் கொண்டுவந்துள்ளேன். TN30Q1522 என்ற இருசக்கர வாகனம் அதனுடைய வாகனத்தின் வாகன பதிவறிக்கை எ.மா.சா.ஆ.3, வாகன பதிவு அறிக்கை எ.மா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வா.சா.ஆ.4 ல் ஓட்டுநர் உரிமம் இல்லை என்ற சலான் வழங்கப்பட்டுள்ளது.

2) வாகன ஒட்டுநருக்கு விபத்து சமயத்தில் வாகன ஓட்டுநர் கள்ளக்குறிச்சி பகுதி சார்ந்தவராக காட்டப்பட்டுள்ளது. அதிலும் கணினி மூலம் விசாரரித்ததில் அவருக்கு எவ்வித ஓட்டுநர் உரிமம் வழங்கப்பட்டவில்லை என்று தெரியவருகிறது. மேற்படி விபத்து 24.02.2018 ல் நடைபெற்றது. விபத்து சமயத்தில் வாகனத்தின் ஓட்டுநர் செங்குட்வேல், த/பெ. முத்துகவுண்டர், 7/152 எச், பாரதி நகர், சிறுவாச்சூர் அஞ்சல், ஆத்தூர் வட்டம் என காட்டப்பட்டுள்ளது. விபத்து சமயத்தில் ஒட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என செக் ரிப்போட்டு உள்ளது. விபத்து சமயத்தில் ஓட்டுநர் கணேசன் த/பெ. பழனிவேல், கும்பகோணத்தார் தோட்டம், தச்சுர் என கண்டுள்ளது.

3) ஆய்வு அறிக்கையில் தற்போதைய உரிமையாளர் பெயர் கணேசன் த/பெ. பழனிவேல், கும்பகோணத்தார் தோட்டம், தச்சுர் என கண்டுள்ளது. அது 27.06.2022 ல் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மோட்டர் வாகன சட்டத்தின் படி ஒரு வாகனம் விற்பனை செய்தால் குறிப்பிட்ட நாட்களுக்குள் அலுவலகத்திற்கு தெரிவிக்கவேண்டும் என்றால் எனக்கு தெரியாது. வாகனம் விற்பனை செய்ததால் குறிப்பிட்ட காலத்திற்குள் ஆர்.டி.ஓ. அலுவலகத்திற்கு அதன் உரிமையாளர் தகவல் தெரிவிக்கவேண்டும்.

4) என்னிடம் காட்டப்படும் டெலிவரி சீட்டு இரு சக்கர வாகனத்திற்கு உரியது (எ.மா.சா.ஆ 1). பெயர் மாற்றம் எந்த டெலிவரி சீட்டின் அடிப்படையில் செய்யப்பட்டது என்ற ஆவணங்கள் இல்லை.

<u>குறுக்கு விசாரணை:-</u>

5) விபத்து நடந்த தேதியில் 1 ம் எதிர்மனுதாரர் செங்குட்வேல் தான் ஆவணங்களின் படி வாகனத்தின் உரிமையாளர். விபத்து நடந்த பின்னிட்டு தான் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தச்சுர் கிராமம் ஆத்தூர் வட்டார போக்குவரத்து எல்லையில் இல்லை. அது கள்ளக்குறிச்சி மாவட்டம். ஆத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் லைசன்ஸ் எடுப்பவர் விவரங்கள் மட்டுமே எங்களால் பரிசோதிக்க இயலும் என்றால் முகவரி வைத்து கணினி மூலம் அந்த நபருடைய லைசன்ஸ் விவரங்கள் எடுக்க முடியும்.

6) மேற்படி கணேசன் என்பவருக்கு கள்ளக்குறிச்சி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் லைசன்ஸ் உள்ளதா என்பதை ஆய்வு செய்ததற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. கள்ளக்குறிச்சி, ஆத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தை தவிர வேறு போக்குவரத்து அலுவலகத்தில் லைசன்ஸ வாங்கியிருக்கலாம் என்றால் அதை பற்றி உறுதியாக தெரியாது.

7) ஓட்டுநர் கணேசனுக்கு லைசன்ஸ் இல்லை என்று உறுதியாக சான்று ஆவணங்கள் இல்லாத பட்சத்தில் அவருக்கு லைசன்ஸ் இல்லை என்று சொல்லமுடியாது என்றால் சரிதான்.

<u>மறு குறுக்கு விசாரணை :-</u>

8) மேற்படி அழைப்பாணையில் மேற்படி கணேசனின் லைசன்ஸ் பற்றி விவரங்களை அலுவலக கோப்பில் ஒப்பிட்டு சாட்சியம் அளிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அலுவலக கோப்பை ஆய்வு செய்து தான் சாட்சியம் அளித்துள்ளேன்.

<u>**1** ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை :-</u>

9) எ.மா.சா.ஆ-4 ன் படி இன்றைய தேதியில் மேற்படி இரு சக்கர வாகனத்தின் உரிமையாளர் கணேசன், த/பெ. பழனிவேல் தான். எ.மா.சா.ஆ.3 ல் ஓட்டுநர் என்ற இடத்தில் உள்ள பெயர் கணேசன், த/பெ. பழனிவேல். மேற்படி இரண்டு ஆவணங்களிலும் கணேசன் என்ற பெயரின் முகவரி ஒரே முகவரிதான். மேற்படி அறிக்கையின் படி வாகனத்தின் உரிமையாளர் மற்றும் ஓட்டுநர் கணேசன் தான்.

10) எ.மா.சா.ஆ-1 உரிமையாளர், வாங்குபவருக்கு எழுதிக்கொடுக்கும் விற்பனை ஆவணம். டெலிவரி சீட்டு எங்கள் அலுவலகத்திற்கு வராது. டெலிவரி சீட்டு முன்னாள் உரிமையாளர் எழுதிக்கொடுத்த ஆவணம் என்று சொன்னால் எனக்கு தெரியாது. கணேசன் என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொல்லியுள்ள நிலையில் அப்பா பெயரை வைத்து மட்டும் சொல்ல இயலாது, முகவரி மாற்றி இருந்தாலும் சொல்ல இயலாது. இதே கணேசனுக்கு வேறு போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் இருந்தாலும் அதை பற்றி சொல்ல இயலாது.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

**Sd/-S.Ganesan**
**Accidents Claim Tribunal,**
**Attur.**